Five Year Plan -Planning Commission -Niti Ayog

| 5 YEAR PLAN | |
|---|---|
| ஐந்தாண்டுத் திட்டங்கள் வாயிலாகப் பொருளாதாரத் திட்டமிடலை மேற்கொள்ளும் முறை ரஷ்யாவிடமிருந்து [முன்னாள் சோவியத் ரஷ்யா (USSR)] தருவிக்கப்பட்டது. இதுவரை இந்தியா 12 ஐந்தாண்டுத் திட்டங்களைத் செயல்படுத்தியுள்ளது. பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டமே(2012-2017) இறுதியான ஐந்தாண்டுத் திட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறுத்தி விட்டு அதற்கு பதிலாக நிதி ஆயோக் (National Institution for Transforming India) மூலம் திட்டமிட முடிவு செய்துள்ளது. | The concept of economic planning in India or five year plan is derived from Russia (then USSR). India has launched 12 five year plans so far. Twelfth five year plan was the last one. The government of India has decided to stop the launching of five year plans and it was replaced by NITI Aayog. |

## முதல் ஐந்தாண்டுத்திட்டம் (1951 – 1956)

- இது ஹாரோட் டாமர் (Harrod–Domar) மாதிரியை அடிப்படையாக் கொண்டது.
- இதன் முதன்மை நோக்கம் நாட்டின் வேளாண்மை முன்னேற்றமாகும்.
- இத்திட்டம் 3.6% வளர்ச்சி வீதத்துடன் (இலக்கை விட அதிகம்) வெற்றி பெற்றது.

Target → 2.1%

## First Five Year Plan (1951-1956)

- It was based on the Harrod-Domar Model.
- Its main focus was on the agricultural development of the country.
- This plan was successful and it achieved the GDP growth rate of 3.6% (more than its target)

| | |
|---|---|
| **இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் (1956 – 1961)** | **Second Five Year Plan (1956-1961)** |
| ■ இத்திட்டம் பேராசிரியர் PC மஹலநோபிஸ் (P.C. Mahalanobis) மாதிரியை அடிப்படையாகக் கொண்டது | ■ It was based on the P.C. Mahalanobis Model. |
| ■ இதன் முதன்மை நோக்கம் நாட்டின் தொழில் முன்னேற்றத்தை மேம்படுத்துவதாகும். | ■ Its main focus was on the industrial development of the country. |
| ■ இத்திட்டம் 4.1% வளர்ச்சியுடன் வெற்றி பெற்றது. | ■ This plan was successful and it achieved the growth rate of 4.1% |

## மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டம்
## (1961–1966)

- இத்திட்டம் "காட்கில் திட்டம்" (Gadgil) என்றும் அழைக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் முதன்மை நோக்கம் சுதந்திரமான பொருளாதாரம் மற்றும் சொந்த முன்னேற்ற நிலையை ஏற்படுத்துதல் ஆகும்.
- சீன – இந்தியப்போரின் காரணமாக இலக்கு வளர்ச்சியான 5.6% ஐ அடைய இயலவில்லை.

"சமச்சீர் பிராந்திய வளர்ச்சி" என்பது முதன்முதலில் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1961-1966) வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டது .

## Third Five Year Plan
## (1961-1966)

- This plan was called 'GadgilYojana' also.
- The main target of this plan was to make the economy independent and to reach self propelled position or take off.
- Due to Indo -China war, this plan could not achieve its growth target of 5.6%

"Balanced Regional Development" was first explicitly mentioned in the Third Five Year Plan (1961-1966).

| | |
|---|---|
| **திட்ட விடுமுறைக் காலம் (1966 – 1969)** | **Plan Holiday (1966-1969)** |
| ■ இந்தியா பாகிஸ்தான் போரும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தோல்வியுமே இத்திட்ட விடுமுறைக்கான முதன்மைக் காரணமாகும். | ■ The main reason behind the plan holiday was the Indo-Pakistan war & failure of third plan. |
| ■ இக்கால கட்டத்தில் ஓராண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வேளாண்மை, வேளாண் சார் துறைகளுக்குள்ளும் தொழில் துறைகளுக்குள்ளும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. | ■ During this period, annual plans were made and equal priority was given to agriculture, its allied sectors and the industry sector. |

## நான்காம் ஐந்தாண்டுத்திட்டம்

## (1969 – 1974)

- இத்திட்டத்தின் இரண்டு முக்கிய நோக்கங்கள், நிலையான வளர்ச்சியும் தற்சார்பு நிலையை அடைதலும்.
- இத்திட்டம் அதன் இலக்கான 5.7% வளர்ச்சியை எட்டாமல் 3.3% வளர்ச்சியை மட்டுமே பெற்று தோல்வியடைந்தது.

# Fourth Five Year Plan (1969-1974)

- There are two main objectives of this plan i.e. growth with stability and progressive achievement of self reliance.
- This plan failed and could achieve growth rate of 3.3% only, against the target of 5.7%.

- There was a focus on the ideas of growth with stability and progress towards self-reliance.
- The fourth five-year plan was based on the Ashok Rudra Menon model.
- This plan led to the beginning of the politicisation of planning in India.
- During the fourth five-year plan, The Indira Gandhi government nationalised 14 major Indian banks, and the Green Revolution in India advanced agriculture.
- India also performed the Smiling Buddha underground nuclear test (Pokhran-1) in Rajasthan on 18 May 1974.

| | |
|---|---|
| **ஐந்தாம் ஐந்தாண்டுத்திட்டம் (1974 – 1979)** | **Fifth Five Year Plan (1974-1979)** |
| ■ இத்திட்டத்தில் வேளாண்மைத் தொழில் துறை, சுரங்கத் தொழில் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. | ■ In this plan top priority was given to agriculture, next came industry and mines. |
| ■ ஒட்டுமொத்தமாக நோக்குகையில் இலக்கு வளர்ச்சியான 4.4% ஐ விட அதிகமாக 4.8% வளர்ச்சி பெற்று இத்திட்டம் வெற்றி பெற்றது. | ■ Overall this plan was successful, which achieved the growth rate of 4.8% against the target of 4.4%. |
| ■ இத்திட்டத்திற்கான முன் வரைவு D.P.தார்(DHAR) அவர்களால் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் 1978 ஆம் ஆண்டு (ஓராண்டுக்கு முன்பே) கைவிடப்பட்டது. | ■ The draft of this plan was prepared and launched by D.P. Dhar. This plan was terminated in 1978. |
| **குறைந்தபட்ச தேவைகள் திட்டம்" தொடங்கப்பட்டது** | **"Minimum Needs Programme" was launched in 1974** |

| | |
|---|---|
| **சுழல் திட்டம்**<br>1978-79 ஆம் ஆண்டு ஒரு ஆண்டுக் காலத்திற்காக இச்சுழல் திட்டம் தொடங்கப்பட்டது. இது ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தை நீக்கிய பிறகு தொடங்கியது. | **Rolling Plan**<br>This plan was started with an annual plan for 1978-79 and as a continuation of the terminated Fifth Five year's plan. |
| **ஆறாம் ஐந்தாண்டு திட்டம் (1980–1985)**<br>■ இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் வறுமை ஒழிப்பும் தொழில்துறை தற்சார்பும் ஆகும். "வறுமை ஒழிப்பு" (GARIBI HATAO) என்பதே இதன் இலட்சியமாகும்.<br>■ இது முதலீட்டுத் திட்டத்தை அடிப்படையாக கொண்டது.<br>■ இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 5.2%. ஆனால் 5.7% வளர்ச்சி எட்டப்பட்டது. | **Sixth Five Year Plan (1980-1985)**<br>■ The basic objective of this plan was poverty eradication and technological self reliance. Poverty eradication (GARIBI-HATAO) was the motto.<br>■ It was based on investment plan.<br>■ Its growth target was 5.2% but it achieved 5.7%.<br>**Priority: Family planning program, development, self-** |

| | |
|---|---|
| முன்னுரிமை: குடும்ப கட்டுப்பாட்டு திட்டம், வளர்ச்சி, தற்சார்பு, சமூகநீதி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. | reliance, and social justice were given importance. |
| **ஏழாம் ஐந்தாண்டுத்திட்டம் (1985 – 1990)**<br>■ இத்திட்டத்தின் நோக்கம் தன்னிறைவுப் பொருளாதாரத்தை உருவாக்குதல், ஆக்கப்பூர்வமான வேலைவாய்ப்பை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.<br>■ முதன்முறையாக பொதுத்துறைக்கும் மேலாகதனியார்துறைக்குமுன்னுரிமை வழங்கப்பட்டது.இது தனியார் துறையின் வெற்றியாக அமைந்தது.<br>■ இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 5.0% ஆனால் 6.0% வளர்ச்சி காணப்பட்டது. | **Seventh Five Year Plan (1985-1990)**<br>■ Objectives of this plan included the establishment of the self sufficient economy and opportunities for productive employment.<br>■ For the first time, due to the pressure from private sector the private sector got the priority over public sector.<br>■ Its growth target was 5.0% but it achieved 6.0%. |

| | |
|---|---|
| **ஆண்டுத் திட்டங்கள்**<br><br>மைய அரசில் நிலையற்ற அரசியல்சூழல் நிலவியதால் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இயலவில்லை. எனவே *1990 – 91* மற்றும் *1991 – 92* ஆம் ஆண்டுகளுக்கு இரு ஓராண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. | **Annual Plans**<br><br>Eighth five year Plan could not take place due to volatile political situation at the centre. So two annual programmes are formed in 1990-91& 1991-92. |

## எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1992–1997)

- இத்திட்டத்தில் வேலைவாய்ப்பு, கல்வி, சமூகநலம் முதலான மனித வள மேம்பாடு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது.
- இத்திட்ட காலத்தில் இந்தியாவிற்கான புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தபட்டது.
- இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு *5.6%*. ஆனால் *6.8%* ஆண்டு வளர்ச்சி எட்டப்பட்டது.

## Eighth Five Year Plan (1992-1997)

- In this plan top priority was given to the development of human resources i.e. employment, education and public health.
- During this plan, New Economic Policy of India was introduced.
- This plan was successful and got annual growth rate of 6.8% against the target of 5.6%.

| | |
|---|---|
| **ஒன்பதாம் ஐந்தாண்டுத்திட்டம் (1997 – 2002)**<br>■ சமூக நீதியுடன் கூடிய சமமான வளர்ச்சிக்கு இத்திட்டத்தில் முக்கிய கவனம் கொடுக்கப்பட்டது<br>■ இத்திட்டகால இலக்கான 7% வளர்ச்சி எட்டப்படவில்லை. இந்தியப் பொருளாதாரம் 5.6% வளர்ச்சியை மட்டுமே அடைந்தது. | **Ninth Five Year Plan (1997-2002)**<br>■ The main focus of this plan was "growth with justice and equity".<br>■ This plan failed to achieve the growth target of 7% and Indian economy grew only at the rate of 5.6%. |
| **பத்தாம் ஐந்தாண்டுத்திட்டம் (2002 – 2007)**<br>■ இத்திட்டம் அடுத்த பத்தாண்டுகளில் தலா வருவாயை இருமடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது. | **Tenth Five Year Plan (2002-2007)**<br>■ This plan aimed to double the per capita income of India in the next 10 years.<br>■ It aimed to reduce the poverty ratio to 15% by 2012. |

| | |
|---|---|
| ■ இத்திட்டம் 2012 ஆம் ஆண்டில் வறுமை விகிதத்தை 15% ஆக்க குறைக்கும் குறிக்கோளைக் கொண்டிருந்தது.<br><br>■ இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 8.0%. ஆனால் 7.2% மட்டுமே எட்டப்பட்டது. | ■ Its growth target was 8.0% but it achieved only 7.2%.<br><br>• Its duration was from 2002 to 2007, under the leadership of Atal Bihari Vajpayee and Manmohan Singh.<br>This plan aimed to double the Per Capita Income of India in the next 10 years. Its growth target was 8.0% but it achieved only 7.6%. |
| **பதினொன்றாம் ஐந்தாண்டுத்திட்டம் (2007 – 2012)**<br><br>■ இதன் முக்கிய நோக்கம் "விரைவான, அதிகமான, உள்ளடக்கிய வளர்ச்சியாகும்"<br><br>■ இதன் வளர்ச்சி இலக்கு 8.1%. ஆனால் எட்டப்பட்டது 7.9% மட்டுமே. | **Eleventh Five Year Plan (2007-2012)**<br><br>■ Its main theme was "faster and more inclusive growth".<br><br>■ Its growth rate target was 8.1% but it achieved only 7.9% |

| பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத்திட்டம் (2012 – 2017) | Twelfth Five Year Plan (2012-2017) |
|---|---|
| ■ இதன் முதன்மை நோக்கம் "விரைவான அதிகமான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியே" ஆகும். | ■ Its main theme is "Faster, More Inclusive and Sustainable Growth". |
| ■ இதன் வளர்ச்சி இலக்கு 8% ஆகும் | ■ Its growth rate target is 8%. |

## நிதி ஆயோக்

திட்டக்குழு என்பதற்கு மாற்றாக நிதி ஆயோக் என்னும் அமைப்பு 2015ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது. இது நீடித்த நிலையான வளர்ச்சியை மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும், செயல்படுத்தவும் செயல்படும். நிதி ஆயோக் என்பது இந்திய அரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் கண்காணிக்கும் அறிவு மையமாகும். தேசிய, சர்வதேச பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நடைமுறைகளையும், புதிய கொள்கைகளையும் ஏற்படுத்தவும், தனிப்பட்ட சிக்கல்களுக்கான ஆதரவையும் தரும். இது சார்ந்த சாதனைகளை புரிந்து கொள்ள தனிப்பட்ட ஆராய்ச்சியை மேற்கொள்ளவேண்டும்.

## NITI Aayog

*The Planning Commission has been replaced by the NITI Aayog on 1st January, 2015. NITI (National Institution for Transforming India) Aayog will monitor, coordinate and ensure implementation of the accepted sustainable development goals. NITI Aayog serves as a knowledge hub and monitors progress in the implementation of policies and programmes of the Government of India. It includes the matters of national and international importance on the economic front, dissemination of best practices from within the country and from other nations, the infusion of new policy ideas and specific issue-based support. In order to understand the achievements of the NITI Aayog, researches need to be done then and there.*

| 12th -Planning | |
|---|---|
| தவறாக நடைமுறைப்படுத்துவதனால் நன்கு வடிவமைக்கப்பட்டத் திட்டம் தோல்வியடையலாம். ஆனால் சரியாக நடைமுறைப்படுத்துவதனாலேயே தவறாக வடிவமைக்கப்பட்டத் திட்டம் வெற்றியடைந்துவிடாது.<br><br>இன்றைக்கும் என்றைக்கும் உன்னுடைய வேலைகளைத் திட்டமிட்டு பிறகு நடைமுறைப்படுத்து.<br><br>– **மார்கரெட் தாட்சர்** | **A good plan may fail due to faulty implementation. But a faulty plan cannot succeed through good implementation.**<br><br>**"Plan your work for today and every day, then work your plan."**<br><br>-***Margaret Thatcher*** |

## 11.6 வறுமை நச்சுச் சுழற்சி

முன்னேற்றம் குறைவாக உள்ள நாடுகளில் குறைவான முன்னேற்றமே முன்னேற்றத்தைக் குறைவான அளவிலே தொடர்ந்து நீடிக்கச் செய்யும் சுழற்சியினை உருவாக்குகிறது. நச்சுச் சுழலானது ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று ஏழைநாடுகளை தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருக்கும் விதத்தில் செயல்படுவதைக் குறிப்பதாக ராக்னர் நர்க்ஸ் கூறுகிறார்.

There are circular relationships known as the 'vicious circles of poverty' that tend to perpetuate the low level of development in Less Developed Countries (LDCs). Nurkse explains the idea in these words: "It implies a circular constellation of forces tending to act and react upon one another in such a way as to keep a poor country in a state of poverty. For example,

11.7

## திட்டமிடல்

### திட்டமிடலின் பொருள்

மையத் திட்டமிடல் ஆணையத்தால் நன்கு வடிவமைக்கப்பட்ட, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களையும், நோக்கங்களையும் அடைவதற்கான வழிமுறையே திட்டமிடல் ஆகும்.. பொருளாதாரம், அரசியல், சமூக ராணுவ நோக்கங்களைத் திட்டமிடல் மூலம் அடைவதற்கான இலக்குகளாக இருக்கலாம்.

11.7

## Planning

### Meaning

Planning is a technique, a means to an end, the end being the realization of certain pre-determined and well-defined aims and objectives laid down by a central planning authority. The end may be to achieve economic, social, political or military objectives.

| திட்டமிடலின் இலக்கணங்கள் | Definitions |
| --- | --- |
| பொருளாதாரத் திட்டமிடல் என்பது 'தனியார் உற்பத்தி, வழங்கல் நடவடிக்கைகளைக் கூட்டாகக் கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவதைக் குறிப்பதாகும்" | *Economic Planning is "collective control or suppression of private activities of production and exchange".* |
| – இராபின்ஸ் | *-Robbins-* |
| "பொருளாதாரத் திட்டமிடல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக சிந்தித்து, இருக்கக்கூடிய பொருளாதார வளங்களை அதிக அளவில் பயன்படுத்த சுட்டிக்காட்டும் வழிமுறைகளே ஆகும்". | *"Economic Planning in the widest sense is the deliberate direction by persons in-charge of large resources of economic activity towards chosen ends".* |
| – டால்ட்டன் | *Dalton-* |

| | |
|---|---|
| **11.7.1. இந்தியாவில் திட்டமிடல்** | **11.7.1. Economic Planning in India** |
| ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அடைய வேண்டிய இலக்குகளை, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார நோக்கங்களையும், வழிகாட்டுதல்களையும் அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட முடிவுகளையும் திட்டங்களையும் உள்ளடக்கிய வரைபடமே பொருளாதாரத் திட்டமிடல் ஆகும். | Consists of economic decisions, schemes formed to meet certain pre-determined economic objectives and a road map of directions to achieve specific goals within specific period of time. The current thinking of economic planning is fairly new, somewhat rooted in Marxist socialism. In the 20th century, |

| | |
|---|---|
| சோவியத் ஒன்றியம் திட்டமிடலை 1928–ஆம் ஆண்டில் செயல்படுத்தத் துவங்கியது. பொருளாதாரத் திட்டமிடலே சோவியத் நாட்டை வல்லரசு நாடாக மாற்ற உதவியது. 1930–ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம் அமெரிக்காவில் மக்களின் வாங்கும் திறனைக் குறைத்துச் சிக்கலான சூழ்நிலையை உருவாக்கியதால், பொருளாதாரத் திட்டமிடல் அவசியம் என்னும் கருத்து வலுவடைந்தது. நாட்டின் வளங்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் சிறப்பாக ஒதுக்கீடு செய்ய இரண்டாம் உலகப்போரினால் ஏற்பட்ட சூழல் நிர்பந்தத்தை உருவாக்கியது. போரின் விளைவுகளை சமாளிக்கத் திட்டமிடல்தான் சரியான தீர்வு என்ற சிந்தனை பரவத் தொடங்கியது. | Soviet Union adopted economic planning for the first time in 1928 that enabled the country to turn into an industrial superpower. The idea of economic planning was strengthened during the Great Depression in 1930s. The outbreak of the World War II also required adequate and suitable planning of economic resources for the effective management after the effects of post war economy. |

| | |
|---|---|
| இந்திய விடுதலைக்குப்பிறகு 1948–ஆம் ஆண்டில் தொழில் கொள்கை அறிவிக்கப்பட்டது. இதில் மையத் திட்டக்குழு, கலப்புப் பொருளாதார அமைப்பு முறை ஆகிய இரண்டையும் அமைக்கப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஜனவரி 26, 1950 அன்று நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1950–ஆம் ஆண்டு மார்ச் 15, திட்டக் குழு அமைக்கப்பட்டது. 1951–ஆம் ஆண்டு ஏப்ரல் 1, முதல் திட்ட காலம் துவங்கியது. இதில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் 1951 முதல் 1956 வரை ஆகும். இந்தியாவில் திட்டமிடுதலின் பரிணாம வளர்ச்சியை கீழ்க்காணும் நிகழ்வுகளிலிருந்து புரிந்துக் கொள்ளலாம். | After Independence, in 1948, a declaration of industrial policy was announced. The policy suggested the creation of a National Planning Commission and the elaboration of the policy of a mixed economic system. On January 26, 1950, the Constitution came into force. In logical order, the Planning Commission was created on March 15, 1950 and the plan era began on April 1, 1951 with the launch of the first five year plan (1951-56). The evolution of planning in India is stated below: |

| | |
|---|---|
| 1. சர்.எம்.விஸ்வேஸ்வரய்யா (1934) புகழ்பெற்ற பொறியியல் வல்லுநரும் அரசியல்வாதியுமான எம். விஸ்வேஸ்வரய்யா 1934-ஆம் ஆண்டு இந்தியாவில் திட்டமிடுதலுக்கான அடித்தளத்தை அமைத்தார். அவர் தனது ஆலோசனையாகப் பத்தாண்டுத் திட்டமொன்றை அவர் எழுதிய "இந்திய பொருளாதாரத் திட்டமிடல்" எனும் புத்தகத்தில் விளக்கியுள்ளார். | 1. **Sir M. Vishveshwarayya (1934):** a prominent engineer and politician made his first attempt in laying foundation for economic planning in India in 1934 through his book, "Planned Economy of India". It was a 10 year plan. |
| 2. ஜவகர்லால் நேரு (1938) : "தேசியத் திட்டக் குழு" ஒன்றை அமைத்தார். அன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாகவும், இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்ததாலும் நேருவின் முயற்சிகள் நின்றுவிட்டன. | 2. **Jawaharlal Nehru (1938):** set-up "National Planning Commission" by a committee but due to the changes in the political era and second World War, it did not materialize. |

| | |
|---|---|
| 3. பாம்பே திட்டம் (1940) மும்பையின் 8 முன்னணித் தொழிலதிபர்கள் பாம்பே திட்டம் எனும் திட்டத்தை 1938–ஆம் ஆண்டுல் முன்மொழிந்தனர். இது பதினைந்து ஆண்டுகளுக்கான தொழில் முதலீட்டுத் திட்டமாகும். | 3. **Bombay Plan (1940):** The 8 leading industrialists of Bombay presented “Bombay Plan”. It was a 15 Year Investment Plan. |
| 4. எஸ்.என் அகர்வால் (1944) என்பவர் "காந்தியத் திட்டம்" எனும் திட்டத்தை 1944–ஆம் ஆண்டுல் வழங்கினார். இது வேளாண்மைக் கிராமியப் பொருளாதார முன்னேற்றத்திற்குமான திட்டமாகும்.<br><br>5. எம்.என்.இராய் (1945): மக்கள் திட்டம் என்பதை வடிவமைத்தார். இது வேளாண்மை உற்பத்தியையும், வழங்கலையும் இயந்திர மயமாக்குவதையும் நுகர்வுப் பொருட்களை அரசே வழங்கிட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது. | 4. **S.N Agarwal (1944)** gave the “Gandhian Plan” focusing on the agricultural and rural economy.<br><br>5. **M.N. Roy (1945)** drafted ‘People’s Plan’. It was aiming at **mechanization** of agricultural production and distribution by the state only. |

| | |
|---|---|
| 6. ஜெயப்பிரகாஷ் நாராயணன் (1950): "சர்வோதயத் திட்டம்" ஒன்றை முன்மொழிந்தார். இது காந்திஅடிகள் வினோபா பாவே ஆகியோரின் கருத்துகளின் உத்வேகத்தால் தயாரிக்கப்பட்டத் திட்டமாகும். வேளாண்மை மட்டுமல்லாமல் சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் ஊக்கமளிக்கும் கூறுகளைக் கொண்டத் திட்டமாகும். | 6. J.P. Narayan (1950) advocated, "Sarvodaya Plan" which was inspired by Gandhian Plan and with the idea of Vinoba Bhave. It gave importance not only for agriculture, but encouraged small and cottage industries in the plan. |
| இந்த ஆறுத் திட்டங்களையும் கவனமாக ஆராய்ந்து திட்டக்குழுவை அமைத்து ஐந்தாண்டுத் திட்டங்களாகச் செயல்படுத்த ஜவகர்லால் நேரு முடிவெடுத்தார். அவரே இந்திய அரசின் திட்டக் குழுவின் முதல் தலைவராவார். | After considering all the plans, in the same year. The Planning Commission was set up to formulate Five Year Plans in India by Jawaharlal Nehru. He was the first Chairman of Planning Commission, Government of India. |

| | |
|---|---|
| எனவே ஆர்தர் லூயிஸ், "பின்தங்கிய நாடுகளில் நாட்டு வருமானத்தை உயர்த்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் மிகவும் அவசியம், இதற்குத் திட்டமிடல் என்பது வழிகளையும், வழிமுறையையும் கொண்ட ஒரு சாதனமாகத் திகழ்கிறது" | Hence, Arthur Lewis says, “Planning is more necessary in backward countries to devise ways and means and to make concerted efforts to raise national income” |

## 1. தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை

தன் விருப்பம் போல் செயல்பட இயலாததால் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது. திட்டமிடல் கட்டுப்பாடுகளையும் வழிமுறைகளையும் விதித்து நாட்டிற்கு முதுகெலும்பாக உள்ளது. தலையிடாப் பொருளாதாரத்தில் நுகர்வு, பணியைத் தேர்வு செய்தல், உற்பத்தி செய்தல், விலை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றில் தன்விருப்பம் போல் முடிவெடுக்க உள்ள அனுமதி உள்ளது. ஆனால் திட்டமிட்ட பொருளாதாரத்தில் சிக்கலான முடிவுகளை மத்திய திட்டக்குழு எடுக்கிறது. இது நுகர்வோர், உற்பத்தியாளர், பணியாளர்களைக் கட்டுப்படுத்துகிறது. ஹேயக் எழுதிய "அடிமைத்தனத்திற்கான பாதை" என்னும் நூலில் மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில் மக்களின் பொருளாதார விடுதலையைக் கட்டுப்படுத்தி நாட்டை மந்தநிலைக்கு இட்டுச் செல்லும், எனக் கருத்துத் தெரிவிக்கிறார்.

## 1. Loss of freedom

The absence of freedom in decision making may act as an obstacle for economic growth. Regulations and restrictions are the backbone of a planned economy. The economic freedom comprises freedom of consumption, freedom of choice of occupation, freedom to produce and the freedom to fix prices for the products. Under planning, the crucial decisions are made by the Central Planning Authority. The consumers, producers and the workers enjoy no freedom of choice. Therefore, Hayek explains in his book 'Road to Serfdom' that centralized planning leads to loss of personal freedom and ends in economic stagnation. The decisions by the Government are not always rational. But, freedom to private producers will be misused; profit will be given top priority, welfare will be relegated.

## 11.7.2. திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகள்

1. நாட்டின் அங்காடிகளின் இயக்கத்தை முடுக்கிவிடுதலும் உறுதியாக்குதலும்:
2. வேலையின்மையை அகற்றுதல்:
3. சமமான முன்னேற்றம் ஏற்படுத்துதல்:

i) வேளாண் துறை, தொழில்துறை முன்னேற்றம்:

ii) கட்டமைப்பு முன்னேற்றம்: வேளாண்துறையும் தொழில்துறையும் பொருளாதார, சமூக கட்டமைப்பு இல்லாமல் முன்னேற்றம் பெறமுடியாது. பாசனக் கால்வாய்கள், சாலைகள், தொடர்வண்டிப்பாதைகள், ஆற்றல் வளம் முதலானவற்றை ஏற்படுத்துதல் என்பது வேளாண் துறைக்கும் தொழில் துறைக்கும் மிக முக்கியமானதாகும். கட்டமைப்பு

iii) பண அங்காடி மூலதன அங்காடி ஆகியவற்றின் முன்னேற்றம்:

## 11.7.2. Case for planning

1. To accelerate and strengthen market mechanism:
2. To remove unemployment:
3. To achieve balanced development:

i) Development of Agriculture and Industrial Sectors: The need for

ii) Development of Infrastructure:

ii) Development of Infrastructure: The agriculture and industrial sectors cannot develop in the absence of the economic and social overheads. The building of canals, roads, railways, power stations, etc., is indispensable

iii) Development of Money and Capital Markets: The expansion

| | |
|---|---|
| 4. திட்டமிடல் வறுமையையும் ஏற்றத்தாழ்வையும் குறைக்கும். | 4. To remove poverty and inequalities: |
| **11.7.3. திட்டமிடலுக்கு எதிரான வாதங்கள்**<br><br>1. தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை<br><br>2. தன் முனைப்புக் குறைதல்<br><br>மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில் நடவடிக்கைகளில் ஊக்கப்படுத்துதல், புதுமைகளைப் புகுத்துதல் ஆகியவற்றுக்கு ஊக்கமிருக்காது. திட்டமிடுதலானது வழக்கமான செயல்முறைகளைப் பின்பற்றி வளர்ச்சியில் தேக்கத்தை உண்டுபண்ணும். | **11.7.3. Case against planning**<br><br>1. **Loss of freedom**<br><br>2. **Elimination of Initiative**<br><br>Under centralized planning, there will be no incentive for initiatives and innovations. Planning follows routine procedure and may cause stagnation in growth. The absence of initiatives may |

### 3. அதிகமான நிருவாகச் செலவு

திட்டமிடலின் நோக்கமென்னவோ தொழில்மயமாக்கல், சமூக நீதி, நாட்டு நிலைமையைச் சமப்படுத்துதல் ஆகியன உயர்வானவை. ஆனால் அதற்கு நாடு செலவிடும் தொகை அடையவுள்ள பலனைவிட அதிகமாக இருக்கும். புள்ளிவிவரங்களைச் சேகரித்து, தொகுத்து திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்தி நிருவகிப்பதில் தேவைப்படும் பணியாளர் எண்ணிக்கை மிக அதிகம். லூயிஸ் இதைப்பற்றி குறிப்பிடும்பொழுது "திட்டமிடல்சிறப்பாக அமையவேண்டுமானால் கூடுதலான திட்டமிடல் நிபுணர்கள் தேவை என்கிறார்". சரியான புள்ளிவிவரம் இல்லாமை, தவறாக கணிப்பது, திட்டமிடுதலை சரிவர செயல்படுத்தது ஆகியவை வளங்களை வீணடித்து உபரி அல்லது பற்றாக்குறை நிலைக்குக் கொண்டு செல்லும்.

### 4. முன்கணிப்பதில் உள்ள இடர்கள்

### 3. High cost of Management

No doubt the fruits of planning such as industrialization, social justice and regional balance are good. But the cost of management of the economic affairs outweighs the benefits of planning. Plan formulation and implementation involve engagement of an army of staff for data collection and administration. As Lewis remarks, "The better we try to plan, the more planners we need". Inadequate data, faulty estimations and improper implementation of plans result in wastage of resources and cause either surplus or shortages.

### 4. Difficulty in advance calculations

## 11.8 திட்டமிடலின் வகைகள்

## 11.8 Types of planning

திட்டமிடலின் வகைகள்




Types of planning




### 1. மக்களாட்சி முறைத்திட்டமிடலும் சர்வாதிகாரத் திட்டமிடலும் (Democratic vs Totalitarian Planning)

### 1. Democratic Vs Totalitarian:

| | |
|---|---|
| அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக்கொள்ளும் திட்டமிடலே மக்களாட்சித் திட்டமிடல். அரசு, தனியாரையும் பொது மக்களையும் உள்ளடக்கிய மிகப்பரவலான ஆலோசனைகளைப் பெற்றுத் தயாரிக்கப்பட்டு, அவர்களாலேயே செயல்படுத்தப்படும் திட்டமிடல் முறையாகும். திட்டக்குழுவினால் தயாரிக்கப்பட்ட திட்ட வழிமுறைகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதனை அந்நாட்டின் பாரளுமன்றம் ஏற்கவோ மறுக்கவோ, மாற்றியக்கவோ செய்யும். திட்டங்களைத் தயாரித்தல், செயல்படுத்துதல் ஆகியவற்றில் உள்ள | Democratic planning implies planning within democracy. People are associated at every step in the formulation and implementation of the plan. A democratic plan is characterized by the widest possible consultations with the various state governments and private enterprises at the stage of preparation. The plan prepared by the Planning Commission is not accepted as such. It can be accepted, rejected or modified by the Parliament of the country. |

| | |
|---|---|
| சர்வாதிகாரத் திட்டமிடலில் பொருளாதார நடவடிக்கைகள் மத்திய கட்டுப்பாட்டின் படியும் வழிகாட்டுதலின் படியும் ஒரே ஒரு திட்டமாக இருக்கும். நுகர்வு, பரிமாற்றம், பகிர்வு ஆகிய அனைத்துமே அரசுக் கட்டுபாட்டிலிருக்கும். திட்டக் குழுவே அதிகாரமிக்க அங்கமாகும். இலக்குகள், செயல் முறைகள், ஒதுக்கீடுகள், செயல்படுத்துதல் ஆகியவை திட்டக் குழுவால் முடிவு செய்யப்படும். | Under totalitarian planning, there is central control and direction of all economic activities in accordance with a single plan. Consumption, production, exchange, and distribution are all controlled by the central planning authority. In authoritarian planning, the planning authority is the supreme body. It decides about the targets, schemes, allocations, methods and procedures of implementation of the plan. |

| | |
|---|---|
| **சர்வாதிகார திட்டமிடல்**<br><br>மையத் திட்டக் குழு ஒரு திட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டு நாட்டின் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தி, விரும்பிய திசையில் நடைபெற வைப்பதே சர்வாதிகாரத் திட்டமிடல். | **Totalitarianism**<br><br>A form of rule in which the government attempts to maintain 'total' control over society, including all aspects of the public and private lives of its citizens |
| 2. மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலும் பரவலாக்கப்பட்ட திட்டமிடலும் (Centralized Vs Decentralized Planning) | 2. **Centralized Vs Decentralized:** Under centralized planning, the entire planning process in a country is under a central |

| | |
|---|---|
| மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில், அனைத்து நிலைகளிலும் திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மையத் திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும். திட்டக்குழுவே திட்டம் தீட்டுதல், நோக்கங்களை நிர்ணயித்தல், இலக்குகளைக் கண்டறிதல், தீர்மானித்தல் ஆகியவற்றை செய்கிறது. 'மேலிருந்து திட்டமிடல்' என்றும் இதைக் கூறலாம்.<br><br>பரவலாக்கப்பட்ட திட்டமிடுதலில் மைய அமைப்புகளின் கட்டுபாடுகளின்றி, உள்ளூர் அமைப்புகள், உள்ளூர் நிறுவனங்கள், திட்டங்களைத் தீட்டுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் ஆகியவற்றைச் செய்யும். எனவே இதை 'கீழிருந்து திட்டமிடல்' எனவும் அழைக்கலாம். | planning authority. This authority formulates a central plan, fixes objectives, targets and priorities for every sector of the economy. In other words, it is called 'planning from above'.<br><br>Under decentralized planning local organizations and institutions formulate, adopt, execute and supervise the plan without interference by the central authorities. In other words, it is called 'planning from below'. |
| | |

## 4. சுட்டிக்காட்டும் திட்டமிடலும் கட்டாயமானத் திட்டமிடலும் (Indicative Vs Imperative Planning)

கலப்புப் பொருளாதார நாடுகளுக்கு பொருத்தமானத் திட்டமிடல் முறையாக "மோனட் திட்டம்" என்ற பெயரில் பிரான்ஸ் நாடானது 1947 ஆம் ஆண்டி லிருந்து 1950 வரை செயல்படுத்தியது. திட்டக்குழு இலக்குகளை அடையும் வழிமுறைகளைக் குறிப்புரைகளாக தயாரித்தது, தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தொழிற்சங்கத் தலைவர்கள், நுகர்வோர் குழுக்கள் நிதி நிறுவனங்கள் பிற துறை நிபுணர்கள் ஆகியோரிடம் கலந்து ஆலோசித்து செயல்படுத்தும் திட்டமிடலே சுட்டிக்காட்டும் திட்டமிடல் ஆகும். அரசு பொருளாதார நடவடிக்கைகளை செயல்படுத்த, இலக்குகளை நிர்ணயம் செய்து, அவற்றை தனியார் நிறுவனங்கள் அடைவதற்கு தேவையான வசதிகளை அமைத்துக்கொடுத்து, ஒருங்கிணைக்கும் பணியை மட்டும் மேற்கொள்ளும் வகையில் திட்டமிடல் அமைந்திருக்கும்.

## 4. Indicative Vs Imperative Planning:

Indicative planning is peculiar to the mixed economies. It has been in practice in France since the Monnet Plan of 1947-50. In a mixed economy, the private sector and the public sector work together. Under this plan, the outline of plan is prepared by the Government. Then it is discussed with the representatives of private management, trade unions, consumer groups, finance institutions and other experts. The essential function of planning is coordination of different economic units. The state provides all types of facilities to the private sector. The private sector is expected to fulfill the targets and priorities. The state does not force the private sector but just indicate the areas of operation and targets to be fulfilled. In short, the planning procedure is soft and flexible.

கண்டிப்பானத் திட்டமிடல் முறையில், திட்டம் தயாரித்தலிலும் மற்றும் செயல்படுத்துதலிலும் அரசு அதிகாரமிக்கது. திட்டம் தயாரித்து முடித்துவிட்டால் எவ்விதத் தடைகளுமின்றி திட்டங்கள் செயல்படுத்தப்படும். இரஷ்யாவின் அப்போதைய குடியரசுத் தலைவர் ஜோசஃப் ஸ்டாலின் "நமது திட்டம் நமக்கான அறிவுரைகளாகும்" என்பதைப் பயன்படுத்தினார். அனைத்து வளங்களும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். இங்கு நுகர்வோர் இறையாண்மை இருக்காது. அரசின் கொள்கைகளும் வழிமுறைகளும் மாறாது நிலையாக இருக்கும். சீனாவும், இரஷ்யாவும் இந்தத் திட்டமுறைகளைக் கடைப்பிடிக்கும் நாடுகளாகும்.

Under imperative planning, the state is all powerful in preparation and implementation of the plan. Once a plan is drawn up, its implementation is a matter of enforcement. The USSR President Stalin used to say, 'Our plans are our instructions'. There is complete control over the entire resources by the state. There is no consumer sovereignty. The Government policies and procedures are rigid. China and Russia follow imperative planning.

## திட்டமிடல்



**நீண்டகாலம் 10 ஆண்டுகளுக்கு மேல்**

நீண்ட காலத் திட்டமிடல் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகிறது – வியூகத்திட்டமிடல்

**நடுத்தர காலம் 3 – 7 ஆண்டுகள்**

நடுத்தர காலத் திட்டமிடல் 5 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகிறது – தந்திரமான திட்டமிடல்

**குறுகிய காலம் 1 – ஆண்டு வரை**

குறுகிய காலத் திட்டமிடல் ஆண்டு வரை ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகிறது – செயல்பாட்டுத் திட்டமிடல்

## Planning



**Long - term over 10 year**

Long - term planning is considered for a time period over 10 years - strategic planning.

**Medium - term 3 - 7 years**

Medium - term planning is considered for a time period of 5 years - tactical planning.

**Short - term upto 1 year**

Short - term planning concerns the plans in a time period of 1 year - operational planning.

## 5. குறுகிய கால, நடுத்தரக் கால, நீண்டகாலத் திட்டமிடல்

ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறுகியகாலத் திட்டங்களாகும். "கட்டுப்படுத்தும் திட்டம்", "ஆண்டுத் திட்டம்" எனவும் அறியப்படுகிறது.

மூன்றிலிருந்து ஏழு ஆண்டுக் காலத்தில் முடிவடையும் திட்டங்கள் நடுத்தரக் காலத்திட்டங்கள் ஆகும். பொதுவாக ஐந்தாண்டுத் திட்டங்களாகவே செயல்படுத்தப்படுகின்றன. நிதி மட்டுமல்லாமல் கட்டமைப்பு வளங்களும் இத்திட்டமிடல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு தீட்டப்படும் திட்டங்கள் நீண்டகாலத் திட்டமிடல். இவை 'முன்னோக்குத் திட்டங்கள்' எனவும் அழைக்கப்படுகின்றன. பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களை கொண்டுவருவதே நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையாகும்.

**5. Short, Medium and Long term Planning:** Short-term plans are also known as 'controlling plans'. They encompass a period of one year, therefore, they are also known as 'annual plans'.

The medium-term plans last for a period of 3 to 7 years. But normally, the medium term plan is made for the period of five years. The medium-term planning is not only related to allocation of financial resources but also physical resources.

Long-term plans last for a period of 10 to 30 years. They are also known as 'perspective plans'. The basic philosophy behind long-term planning is to bring structural changes in the economy.

## 11.9 நிதி ஆயோக் (NITI Aayog)

National Institution for Transforming India என்பதன் சுருக்கமே நிதி ஆயோக் என்பதாகும். இதனை இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம் என புரிந்து கொள்ளலாம். இதனை 2014–ஆம் ஆண்டு ஆகஸ்டு 13, திட்டக்குழுவுக்கு பதிலாக இந்த நிறுவனத்தை உருவாக்கும் முடிவை இந்திய அரசு எடுத்தது. இதன்படி ஜனவரி 1, 2015 அன்று அமைச்சரவைக் குழுவின் தீர்மானத்தின் மூலமாக நிதி ஆயோக் அமைக்கப்பட்டது. இந்தியப் பிரதமரே நிதி ஆயோக்கின் தலைவர். மத்திய அமைச்சர்கள் உறுப்பினர்கள் ஆவர். இதன் துணைத்தலைவரே நிருவாகத் தலைவராவார். அரவிந்த் பனகரியா இதன் முதலாவது துணைத்தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.

P73N0

## 11.9 NITI Aayog

AX3IO

NITI Aayog (National Institution for Transforming India) was formed on January 1, 2015 through a Union Cabinet resolution. NITI Aayog is a policy think-tank of the Government of India. It replaced the Planning Commission from 13th August, 2014. The Prime Minister is the Chairperson of NITI Aayog and Union Ministers will be Ex-officio members. The Vice- Chairman of the NITI Aayog is the functional head and the first Vice-Chairman was Arvind Panangariya.

## நிதி ஆயோக் சிறந்த நிருவாகமான 7 தூண்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.




## NITI Aayog is based on the 7 Pillars of Effective Governance



| | |
|---|---|
| **11.9.1. நிதி ஆயோக்கின் பணிகள்**<br><br>நிதி ஆயோக்கின் பணிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.<br><br>1. **கூட்டுறவும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சியும்**<br><br>மாநிலங்கள் நாட்டின் கொள்கை வடிவமைப்பதில் துடிப்புடன் பங்கெடுக்கத் தேவையானவற்றைச் செய்வது | **11.9.1. Functions of NITI Aayog**<br><br>1. **Cooperative and Competitive Federalism:** To enable the States to have active participation in the formulation of national policy. |
| 2. **நாட்டின் நிகழ்வுகளின் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்**<br><br>நாட்டின் முன்னேற்றத்திற்கான முன்னுரிமைகள், உத்திகளில் மாநிலங்களையும் இணைத்துக் கொள்ளுதல் | 2. **Shared National Agenda:** To evolve a shared vision of national development priorities and strategies with the active involvement of States. |

| | |
|---|---|
| **3. பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்**<br>திட்டமிடல் நடைமுறையைக் கீழிருந்து மேல் என்ற முறையில் மாற்றம் கொண்டுவருதல். | **3. Decentralized Planning:** To restructure the planning process into a bottom-up model. |
| **4. தொலை நோக்கும் காட்சித் திட்டமிடலும்**<br>நாட்டின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு இடைக்கால, நீண்டகால, தொலை நோக்குக் கட்டமைப்பை வடிவமைத்தல். | **4. Vision and Scenario Planning:** To design medium and long-term strategic frameworks towards India's future. |
| **5. நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்**<br>அரசின் கொள்கைகள் வடிவமைப்பதிலும், திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் அரசுக்கு வெளியில் உள்ள நிபுணர்கள் ஒன்றிணைந்து பங்குபெற வைத்தல். | **5. Network of Expertise:** To mainstream external ideas and expertise into government policies and programmes through a collective participation. |

| | |
|---|---|
| **6. உகந்ததாக்குதல்**<br><br>அரசின் பல படிநிலைகளில் பணியாற்றுபவர்களைக் குறிப்பாக பலதுறைகள் ஒன்றிணைந்து செயல்படுமிடங்களில் ஏற்படும் சிக்கல்களைக் களைய தொடர்பு கொள்ளுதல், ஒருங்கிணைத்தல், கைகோத்தல் கூட்டிணைத்தல் ஆகியவை மூலம் உகந்தப் பணியை நிதி ஆயோக் செய்கிறது. | **6. Harmonization:** To facilitate harmonization of actions across different layers of government, especially when involving cross-cutting and overlapping issues across multiple sectors; through communication, coordination, collaboration and convergence amongst all the stakeholders. |

| | |
|---|---|
| 7. **சச்சரவுத் தீர்த்தல்**<br><br>அரசுத் திட்டங்களை வேகமாக செயல்படுத்த ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையில், மாநிலங்களுக்கிடையில், அரசுத் துறைகளுக்கிடையில், பிற துறைகளுக்கிடையில் நிலவும் சச்சரவுகளுக்குத் தீர்வுகாண ஒரு தளத்தை அமைத்துக் கொடுக்கிறது. | 7. **Conflict Resolution:** To provide a platform for mutual consensus to inter-sectoral, inter-departmental, inter-state as well as centre-state issues for all speedy execution of the government programmes. |
| 8. **வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்**<br><br>வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளையும் பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் நிதி வளங்களையும் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படும் வகையில் பெற்றுத்தரும் பொறுப்பு அலுவலகமாக நிதி ஆயோக் செயல்படும். | 8. **Coordinating Interface with the World:** It will act nodal point to harness global expertise and resources coming from International organizations for India's developmental process. |

| | |
|---|---|
| **9. உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்**<br><br>கொள்கைகள் திட்டங்கள் ஆகியவற்றை வகுக்க மாநில ஒன்றிய அரசுக்கும் மைய அரசுகளுக்கும் ஆலோசனைகளை வழங்குகிறது. | **9. Internal Consultancy:** It provides internal consultancy to Central and State governments on policy and programmes. |
